742

Reg. No. M. 1354.

போதனா விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 OCT 1940
MADRAS

கொத்து
31

மலர்
4



Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 அக்டோபர் 1940

...முறை பாடசாலை, திருச்சிநுப்பள்ளி.

தனிப்பிரதி அணு 1½.

SC
ஊ241,N111PP.
N40.31.4
182294

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	99
2.	சென்னை கல்வி இலாகா	101
3.	ஆரம்பப் பாடசாலையும், ஆரம்ப இலக்கியமும் ...	104
4.	ஆரம்பப் பள்ளி பால ஸங்கீத வாசகம் ...	106
5.	பாடக் குறிப்பு	108
6.	வாழை இனம்	110
7.	நமது சிறுவர்களின் சுகாதாரம்	111
8.	கல்வித் துறையில் கற்கும் கைவேலைகள் ...	115
9.	ஆழ்ந்த யோசனை	116
10.	நடுவெழுத்தலங்காரம்	117
11.	இருகதைக் கவிகளுக்கு விடை	117
12.	யோசனுவிருத்திச் செய்யுள்—விடைகள் ...	117
13.	பீமனின் தண்டாயுதம்	118
14.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	120
15.	பழைய மாணவர் பக்கம்	121
16.	பழைய மாணவர் சங்கம்	122
17.	உழவைப்பற்றிப் பழமொழிகள்	126
18.	ஆகாய விமானம்	127

Imprimatur: ✠ JAMES,

Bishop of Trichinopoly.

தேவை ! ஏஜெண்டுகள் தேவை !

எமது "போதனுவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணு ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,

போதனுவிஷயப் பூங்கோத்து,

R. C. போதனுமுறைப் பாடசாலை, திருச்சி.

சிங்கப்பூர் தந்த ரோக நிவாரண வைத்தியசாலை

1. வலியில்லாமல் பல் எடுப்பது.

2. சொத்தைப் பல்லை எடுக்காமல் அடைப்பது.

3. சுகாதார முறையில் பல் சுத்தம் செய்வது.

4. வாயில் துர்வாடை, ரத்தம், சீழ் முதலியவை சிகிச்சை.

5. இயற்கைபோல் நூதன முறையில் பல் கட்டுவது. இவை யாவும் குறைந்த சார்ஜிலும், உத்திரவாதத்துடனும் செய்து திருப்தியளிப்பார். ஒரு முறை விஜயம் செய்யவும். மேலும் தினசரி உபயோகத்திற்கு தந்த ரோக நிவாரண பற்பசை (Paste) விலை அணா 8.

பல் டாக்டர் ராபின்சன்,
தெப்பக்குளம் மூலை தியேட்டர் கட்டிடம் மாடி,
திருச்சினாப்பள்ளி.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின்
முன்னேற்றத்துக்கு உழைத்துவரும்
ஓர் மாதாந்தரப் பத்திரிகை

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனும்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்,
94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

புத்தக விளம்பரம்

சென்னை துரைத்தனத்தாரால் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு 1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து தற்கால நவீன முறையில் முதல் ஐந்து வகுப்புகள் வரைக்கும் உபயோகமான தமிழ்-கணக்கு, பூகோளம், இந்துதேச சரித்திரம், தோட்டவேலைகள், ஸிவிக்ஸ் முதலிய புஸ்தகங்கள் என்னால் வெளியிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

புஸ்தகங்கள் கத்தோலிக் ஆசிரியர்களைக்கொண்டு தற்கால பாடத்திட்டத்தை அனுசரித்து வெளிவந்துள்ளன. இன்னும் என்னிடம் உயர்தரக் கலாசாலைகளுக்கு கத்தோலிக் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் புஸ்தகங்கள் வெளிவந்து அனேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பாரங்களுக்குரிய சரித்திரம், சைன்ஸ் முதலியனவும் இருக்கின்றன.

புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து முதல் ஐந்து வகுப்புகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களின் அட்டவணை

மாணவர் மணிமாலை	ஒன்று முதல்	ஐந்து	வகுப்புகளுக்கு
கணக்கு	மூன்றும் வகுப்பு முதல்	5-ம்	,,
சிவிக்ஸ்	மூன்றும் ,,	5-ம்	,,
தோட்டவேலை	மூன்றும் ,,	5-ம்	,,
சரித்திரம்	மூன்றும் ,,	5-ம்	,,

பூகோளம் 5-ம் வகுப்புக்குரியது.

விபரமான கேட்லாக் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

கனம் பள்ளிக்கூட மானேஜர்சுவாமி அவர்களும், ஆசிரியர்களும் என்னுடைய பாடப்புத்தகங்களை தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து கத்தோலிக் பிரசுர கர்த்தாவாகிய என்னை ஆதரிக்கும்படியாக மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. V. D. Packiam Pillai,
Educational Publisher,
TUTICORIN.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
தூத்துக்குடி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1940
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 31] 15 அக்டோபர் 1940 [மலர் 4

பத்திராதிபர் குறிப்புகள்

யுத்த நிதிக்குப் பணவுதவி:—எம் பாடசாலை ஆசிரியர்களும், போதனாமுறை பயிலும் மாணவர்களும், மாதிரிப்பாடசாலைப் பிள்ளைகளும் யுத்த நிதிக்காகப் பணம் சேகரித்துத் தலைமையாசிரியரிடம் சேர்ப்பித்தனர். இவ்வாறு எம்மிடம் யுத்த நிதிக்காகத் தொகை கொடுத்து உதவியவர்கள் அனைவர்க்கும் எமது நன்றி உரிமையாகும்.

எமது மாணவர்களுக்குப் பிற பாடசாலைகளிலும் போதனாப்பயிற்சி:—நமது போதனாமுறைப் பாடசாலையில் போதனாமுறைபயிலும் மாணவர்களுக்கு இங்குள்ள மாதிரிப் பாடசாலையில் வழக்கம்போல் போதனா பயிற்சி கொடுத்து வருவதுடன் இன்னும் அதிக அப்பியாசங்கள் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவ்வருஷம் துவக்கிப் புதிய ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அதாவது சமீபத்திலுள்ள பற்பல ஆரம்பப்பாடசாலைகளுக்கு நமது மாணவர்களை அனுப்பி வகுப்புக்களை நடத்தும்படி திட்டப்படுத்தினோம்.

அதற்கேற்ப எமது செக்கண்டரி, ஹையர் எலிமெண்டரி கிரேடு மாணவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு ஆசிரியரின் கீழ் அமர்த்தினோம். எமது

பாடசாலையைச்சுற்றியுள்ள 7, 8 ஆரம்பப்பாடசாலைகளுக்கு, பாடசாலைக்கு ஒரு பகுதி வீதம் மாணவர்களை அனுப்பினோம். ஒவ்வொரு பகுதியும் அந்தந்தப் பாடசாலைக்குச்சென்று, வகுப்புக்கு 1 பிரிவு (batch) வீதம் திட்டம் செய்தபடி பிரிந்து கொண்டனர். ஒவ்வொரு பீரியடுக்கு ஒரு மாணுக்கர் வீதம் கால அட்டவணையின்படி, பாடம் போதித்து வகுப்புகளை நடத்தினர். இங்ஙனம் ஒரே நாளில் சுமார் 90 மாணவர்களுக்குப் பாடம் போதிக்க வசதி அமைந்தது.

இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை போதனுபயிற்சி மேற்கண்டவாறு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அன்றியும் முதலில் ஒரு பாடசாலைக்குச் சென்றவர்கள் மற்றொரு பாடசாலைக்குச் செல்லும்வண்ணம் (Rotation System) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஷை ஏற்பாட்டின்படி போதிக்கச்சென்ற மாணவர்கள் மிகுந்த உற்சாகத்தைக் காட்டினர். விசேஷமாய் அந்தந்தப் பாடசாலை மானேஜர்களும் எம் மாணவர்களை மனமுவந்து வரவேற்றதுடன், எம் மாணவர்கள் வகுப்புக்களை நடத்தின விதத்தைப்பற்றிப் பெரிதும் பாராட்டியதுடன் மேலும் மேலும் அவர்களை வரவேற்பதில் தங்களுக்குள்ள விருப்பத்தையும், சந்தோஷத்தையும் தெரிவித்துக்கொண்டனர். இந்த ஷை ஏற்பாடு மிகவும் வெற்றிகரமாய் நிறைவேறியதற்காக நாம் மகிழ்வதோடு, எம்முடன் ஒத்துழைத்த ஷை பாடசாலை மானேஜர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர் : இனிமேல் வார்த்தைகளை உளறுமல் தெளிவாய்ப் பேசுவாயா ?

பையன் : இல்லை சார் ; இனிமேல் உறளற உறளறவே மாட்டேன் சார் !

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182294

சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள்

Amendments to Madras Educational Rules

G. O. No. 1703—Ed. dated 3—9—40

Chapter I: Rules for Recognition.

(ஆரம்பப்பாடசாலை அங்கீகார விதிகள்)

பின்வரும் விதி ஏற்கனவேயுள்ள 13(2)க்குப் பதிலாக ஏற்பட்டிருக்கிறது :—

ஒரு பாடசாலையில் சேவைபுரியும் எந்த ஆசிரியராயினும், தாம் வேலைபார்க்கும் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேற விரும்பினால், அப்பாடசாலை மானேஜருக்கு 3 மாத நோட்டீஸ் கொடுத்து அவரது அனுமதியைப் பெற்றுக்கொண்டபின்னரே, வெளியே செல்லவேண்டும்.

அதுபோலவே எந்த மானேஜராயினும் தம்மிடம் வேலை பார்க்கும் எந்த ஆசிரியரையும் வேலையைவிட்டு நீக்க வேண்டுமானால், அந்த ஆசிரியருக்கு 3 மாத நோட்டீஸ்கொடுத்து, அவரது சம்மதத்தைப் பெற்றுக்கொண்டதின்பேரில் அவரை வெளியே அனுப்பவேண்டும்.

ஷை விதிகளை ஒரு பாடசாலை மானேஜர் மீறினால் அந்த மானேஜர் அத்தகைய ஆசிரியருக்கு, அவருக்குரிய 3 மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிடவேண்டும்; ஒரு ஆசிரியர் ஷை விதியை மீறிவிட்டால் அவரது ஸர்வீஸ் ரெஜிஸ்டர் (Service Register) கல்வி அதிகாரிகளால் ரத்துசெய்யப்படும்.

ஆனால் ஷை விதியைக் கீழ்வரும் காரணத்தின்பொருட்டு ஒரு பாடசாலை மானேஜர் அனுசரிக்கத் தேவையில்லை. அதாவது: தம்மிடம் வேலைசெய்யும் ஓர் ஆசிரியரது நடத்தை சரியாக இல்லை என்ற காரணத்தை அவர் ஜில்லா கல்வி அதிகாரிக்குத் தெரிவித்து அவரது சம்மதம் பெற்று அத்தகைய ஆசிரியரை வேலையைவிட்டுத் தள்ளிவிடலாம்.

* * *

G. O. No. 1473—Ed. dated 24th September 1940

ஆரம்பப் பாடசாலைகளின் அங்கிகார விஷயமாய் 22(a) விதியின் திருத்தம் பின்வருமாறு :—

"ஷை பாடசாலைகளில், பிள்ளைகளை வருஷத்தில் இருமுறை சேர்க்கலாம் (Admission). அதாவது பாடசாலை வருஷத் துவக்கத்தில் ஒருதடவையும், கிறிஸ்துமஸ், பொங்கல் அல்லது மிட்-டெர்ம் (Mid-term) விடுமுறை கழிந்தவுடன் மறுமுறையும் ஆக இரண்டு தடவைகளில் மாத்திரம் பாடசாலை வருஷம் தொடங்கியதிலிருந்து ஒருமாத காலத்துக்குள்ளும், அல்லது ஷை விடுமுறை கழிந்த ஒருமாத காலத்துக்குள்ளும் பிள்ளைகளைச் சேர்க்க அனுமதியுண்டு.

ஷை காலவரைக்கு உட்படாத மற்றெந்த காலத்தில் சேர்க்கவேண்டுமானால் டெப்யூடி இன்ஸ்பெக்டரது உத்தரவு பெற்றுக்கொண்டபின்னரே, பிள்ளைகளைச் சேர்க்கக்கூடும்."

எனவே, முதல் வகுப்பில் சேர்க்கவேண்டிய பிள்ளைகளின் விஷயத்திலுங்கூட ஷை விதியைத்தான் அனுசரிக்கவேண்டும். அவர்களை எச்சமயத்திலும் சேர்க்கலாம் என்ற பழய விதி இப்போது எடுபட்டுவிட்டதென்பதையறியவும்.

Proceedings of the D. P. I.

கல்வி டைரேக்டரது சுற்றறிக்கைகள்

(1) ஹையர் எலிமேண்டரி பாடசாலைகளில் VIII வகுப்பின் முடிவில் ஸர்க்கார் பரீட்சை :—இப்பரீட்சையை நடத்துவதைப்பற்றி கல்வி டைரெக்டர் கூறிய யோசனையை சென்னை அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஷை பரீட்சைக்குரிய பாடங்களாவன : 1. தாய்பாஷை ; 2. கணிதம் ; 3. பூகோளம், சரித்திரம், அரசாங்கமுறைப் பாடம் (civics).

இப்பரீட்சையை நடத்த பரீட்சாதிகாரிகள் (Examiners) நியமிக்கப்படுவார்கள். அவர்கள் ஷை பரீட்சையை நடத்தும் விதம், பரீட்சையில் தேறினவர்களுக்கு யோக்கியதாபத்திரம் (certificates) அளித்தல் முதலிய காரியங்களைப்பற்றி விதிகளையமைத்துத் தெரியப்படுத்துவார்கள்.

ஷை பரீட்சை எழுதும் மாணவர்கள் கட்டவேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூ. 1-8-0. இதன் முதல் பரீட்சை

1942-ம் வருஷத்தில் நடைபெறும். எனவே 1941-ம் வூ ஏப்பிரல் மாதத்திற்குப்பிறகு VIII வகுப்பு E. S. L. C. ஸர்டிபிக்கேட்டுகள் அளிக்கப்படமாட்டா.

* * *

(2) ஆரம்பப் பாடசாலைகளில் கட்டாயமாக இருக்க வேண்டிய வேலைசெய்யும் நாட்கள் (working days) :—

இந்த 1940-ம் வருஷத்தில் ஷை பாடசாலைகள்மட்டில் மொத்தத்தில் 210 நாட்கள் வேலைசெய்தால் போதும். ஒரு பாதி வருஷத்திற்கு இத்தனை நாட்கள் என்றும், மறு பாதி வருஷத்திற்கு இத்தனை நாட்கள் என்றும் தனித்தனியாய் கணக்குக் கொடுக்கத் தேவையில்லை. மொத்தமாய் 210 நாட்களுக்குக் குறையாமல் வேலைசெய்யவேண்டியது அவசியம். ஆனால் இந்த விதி இவ்வருஷத்திற்குத்தான் செல்லும்.

மதிப்புரை

"நீதி நாற்பது"

திண்டிவனம் ஆர். ஸி. போதனாமுறைப் பாடசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ. எம். எஸ். சுந்தரேச ஐயரவர்கள் இயற்றியுள்ள "நீதி நாற்பது" எனும் இனிய நூலைப் படித்துப் பார்க்கும் ஸந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. மகிழ்வுற்றேன். கல்வித்துறையில் ஈடுபட்டிருக்கும் சகல ஆசிரியர்கட்கும் இத்தகைய நூல் சமயசஞ்சீவியாகும் என்பது எனது தாழ்மையான துணிபு. மாணவர்கள்பால் நீதி போதனை புகட்டுவதற்கு இப்புத்தகம் பெரிதும் துணைபுரியுமென்பதில் சந்தேகமில்லை. சிறந்த கருத்துக்கள் தெள்ளிய நடையில் சுலபமாய் விளங்கும்படி நூல் ஆசிரியர் இதனை ஆக்கியுள்ளார்.

சுருங்கக்கூறின், மாணவர்களுக்கும் ஆசிரியர்கட்கும் ஏனையோருக்கும் வெகுவாய்ப் பயன்தரக்கூடிய இந்த "நீதி நாற்பதை"ப்போல் மற்றொன்று தற்காலத்தில் காணலரிது. எனவே அனைவரும் நீதி நாற்பதைப் படித்துப் பயன் எய்துவார்களாக.

T. S. Ganapathi Aiyar,
Asst. R. C. Sec. Training School,
TRICHINOPOLY.

ஆரம்பப் பாடசாலையும், ஆரம்ப இலக்கியமும்

(M. A. S. Udayar, Tamil Pundit.)

ஒரு நாடு புகழ்பெற்றோங்கவேண்டுமாயின் அந்நாட்டு ஆரம்பக்கலை உயர்ச்சி அடையவேண்டும். அக்கலை உயர்ச்சி அடையவில்லையாயின் நாட்டு முன்னேற்றம் பெரிதும் தடைபடும். ஏனென்றால் பிறதேசங்களினும் பிரதேசங்களினும் நிகழும் அவ்வப்போதைய நிகழ்ச்சிகளையும், மாற்றங்களையும் தொழில்விருத்தி முதலியவற்றையும், அவ்வப்போது உடனுக்குடன் தெரிந்து ஆவனசெய்தல் நாட்டு மக்களின் கடமை. ஆகவே உள்நாட்டு வெளிநாட்டு நிகழ்ச்சிகளை முக்காலத்தும் ஒப்ப நோக்கி யுணர்தற்குப் பிறருதவியின்றி முடியாது என்னும் நிலைமையில் இருந்து மாறுபடும் நிலைக்கு அஸ்திவாரம் இடுவது ஆரம்பக்கலையேயாகும்.

ஆகையால் இதுபற்றியன்றே நம் மாட்சி மிக்க ஐந்தாம் ஜியார்ஜ மன்னரவர்கள் தமது முடிசூட்டுவிழாவின்போது (டில்லியில்) "ஆரம்பக்கலையை வளர்க்க நான் பெரிதும் முயல்வேன். வேண்டிய பொருளுதவியும் செய்வேன்" என்று மனமகிழ்ந்து கூறியுள்ளார்கள். இதுவன்றிச் சாதாரண நிலையிலுள்ள மக்களும் தம் நிலையைப் பாதுகாத்தற்குரிய கலையறிவின்மையால் பெருங்கேடுறுகின்றனர். இக்கேட்டினின்று மக்களைப் பாதுகாக்கும் பொருட்டே ஆரம்பக் கலைக் கழகங்களும் அக்கலைமுறைப் பயிற்சிதருங் கழகங்களும் வளர்பிறையென்ன வளர்ச்சியுற்று வருகின்றன. இந்நிலையில் எல்லாக் காரியங்களையும், அரசியலாரே கவனித்து ஆவன செய்வார்கள் என எண்ணி நாம் சோம்பியிருத்தல் தகுதியன்று. பாற்சோற்றைத் தங்கக்கலத்திட்டுச் சர்க்கரை சேர்த்துப்பிசைந்து ஊட்டினால், ஊட்டப்பெற்றவாய்ச் சோற்றை விழுங்கு முயற்சியேனும் இல்லாது வாளாவிருக்கும் சோம்பேறி யாது பயனடைவான். எனவே நாமும் அரசியலாரோடு ஒத்துழைத்துக் கலையுயர்ச்சிக்கு வேண்டுவனவாய வழிவகைகளைத் தேடுமார்க்கங்கள் பலவற்றுள் ஒன்றை ஈண்டெடுத்து ஆராய்வோம்.

நாட்டு முன்னேற்றத்திற்கு நாட்டுமொழியேயன்றி அந்நாட்டின் பெருமையை விளக்கவல்ல இலக்கியங்களும் எல்லா மக்களாலும் உணர்ந்துபோற்றப்படுவதொன்றும். ஒவ்வொரு நாட்டிலும் ஆன்றோர் பலர் அந்நாட்டின் பெருமை, பழமை, திறமை, நாகரீக முதலியவற்றைச் செய்யுள் நடையிலும் வசன நடையிலும் வகுத்துக் கூறியதோடு தம் மனவுணர்ச்சியையும் ஆராய்ச்சித் திறத்தையும் அவ்விரு நடையிலும் பலவாறுகக் கூறியுள்ளனர். அவையே அவ்வந்நாட்டு இலக்கியங்களாம். நம் நாட்டில் அவ்விரு வகையிலக்கியங்களுள் முன்னதுவாய செய்யுளிலக்கியமே சிறந்து விளங்குவதாயிற்று. அவ்வாறு செய்யுளிலக்கியம் போற்றப்பட்டதற்குக் காரணமும் இல்லாமலில்லை. விஷயங்களை யெளிதில் மனப்பாடம் செய்வதற்கும், பாடம் செய்யப் பெற்றவையை மறந்துபோகாதிருப்பதற்கும் செய்யுளிலக்கியங்களே சிறந்த கருவிகள். ஆனால் ஆரம்பத்தில் செய்யுளிலக்கியங்களிலிருந்து எளிதில் விஷயங்களை அறிந்துகொள்ளுதல் என்பது முடியாததொன்றும். அதற்குப் பொறுமையும் முயற்சியும் நிரம்பவேண்டும். தாம் உடுத்தும் உடையையும் பிறர் உடுத்திவிடுதல்வேண்டும் என்று விரும்பும் மக்களுக்கு இது சாத்தியமாகாது. இதனையுணர்ந்தே தற்காலத்து ஆன்றோர் பலர் நம் நாட்டிலும் வசனநடையில் இலக்கியங்களை யெழுதப் புகுந்தனர்; புகுகின்றனர், புகுவர். இத்தகைய பெரியார்க்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுளது.

எனினும் சிறிது முயற்சிவேண்டும் எனும் காரணத்தால் செய்யுளிலக்கியக்கலையையே முற்றும் விடுத்தலோ பெரிதும் விடுத்துச் சிறிது போற்றுதலோ தகவுடைத்தன்று. அதனால் அறிவுடைச் சான்றோர் தற்காலப் போதனைமுறைக்கேற்ப ஆரம்ப இலக்கியங்களாய, ஆத்திசூடி, கொன்றைவேய்ந்தோன், நல்வழி, வெற்றிவேற்கை, உலகநீதி முதலியவற்றைத் தடுமாறு பாடபேதங்களை நீக்கி நம் "பூங்கொத்து," "ஆரம்பக்கல்வி" முதலிய பத்திரிகை வாயிலாக வெளியிட்டுப் பெரிதும் உபகாரிகள் ஆகவேண்டும். அத்தகைய உதவிசெய்யுமாறு பெரியர் முன்வருவார்களா? வரின் நலம் பல பெருகும்.

ஆரம்பப் பள்ளி பால சங்கீத வாசகம்

A. Gnanadickam, *Music Teacher*,

St. Joseph's Higher Elementary School, Ootacamund.

வகுப்பு : 4 அல்லது 5.

சூரியகாந்தி

நவரோஜ் 29. ஆதி.

1. இயற்கைப்பொ ருளென் பார்கட வுள்
இயற்றிபார் தந்தார் பலஅவற் றுள்
பயக்கும்ந லனைக் கா.ண்மன ஸாந்தி
பகர்வோம் அழகுசூ ரியகா. ந்தி

2. சூ.ரிய காந்திப் பூபெரி து
சுலபவ ழிதான் பயிர்செய்வ து
சீ.ரிய அமெ ரி.க்கருங் கண்டு
செய்.தார் பயிரங்கு ஏ.ரா. ளம்

3. ஏ.ரா. ளமாய் விதைகள்உண் டு
எழிலா. ர்ப்பூவில் தே.னும்உண் டு
தா.ரா. ளமாய் வ.ண்டுகள் கண்டு
தா.மும் உ.ண்டு. மிகக்களிக் கும்

4. களிக்கும்அ ழகாய் நம்.நா. ட்டார்
கண்.களுக் கழ கெனந. ட்டார்
விளித்துஉ ரிமை யுடன்பயிர் செய்ய
விளையும் அதன்பயன் ஓ.திடு வோம்

5. ஓ.தும்ம லரில் தேன்அழ காய்
ஒளியுந்தி கழ மகர. ந்தத்
தா.துவின் மணத் தா.ல்ஈக்கள் கூடி
த.ங்க அருகி.ல் கூ.டமைக் கும்

6. அமைக்கவுங் கண்ட க்ருஷிக ரும்
அருகிற்செ றிந்த வளசோ. லை
சமைப்பர்வ யலில் சூ.ரிய காந்தி
சரியாய்ப் பயிர்செய்வர் பருவத்து டன்

7. பருவகா லத்தில் பூமல ரும்
பார்க்கக்கண் களை மிகக்கவ ரும்
குறுகிய வாய்கை கா.ல்களைக் கொண்டு
குணமாய் ஈ.க்களும் தே.ன்சே. ர்க்கும்

8. சேர்க்குமத் தேனைக் கா.த்திருந் து
சே.க. ரிப்பர் ப.க்குவமாய்
யா. ர்க்கும் எ.ங்கும் வி.ற்பனை செய்து
இ.ன்பு றுவர்பெரும் ஊ.தியத் தால்

9. ஊ.தியம் இன்னும் ம.ற்றொன் று
உலர்ந்தஅக் கூட்டை மெழுகா. க
போ.திய பதம் செய்துவ. ர்த்தியாய்
பொன்பெறு வார்,அப் பு.ட்பத்தி லும்

10. புட்பங்க ளிலும் விதையனந் தம்
பொ.ன்போல் முற்ற உலர்த்திச்சொந் த
இ.ட்ட.ம் போலும் செ.க்கிலிட் டாட்டி
எ,ண்ணெய் பிழிவ.ர் பி.ண்ணாக் கும்

11. பி.ண்ணா.க் கும்கால் நடையுண வு
பிழிந்த. எண்ணெய் பலவித மாய்
உ.ண்ணும்பொ ருட்கும் உலர்ந்தஅத் தட்டை
உணவாய் ஏ.ற்கும் மா.டுக ளும்

12. உணவிடு முன்பு நாரெடுப் பர்
உயர்ந்தகா கிதம் அதில்தொடுப் பர்
குணமாய்ப்ப ணமும் மிகமிக சேர்ப்பர்
குவல யமறிந்த அமெ.ரி.க் கர்

13. அறிந்தநாம் இனி அச்செடி யை
அமைத்து. நன்றாய்ப் பயிர்செய். ப
நிறைந்தப லனை அடையமாட் டோமா?
நினைப்போம் இனிஇயற் கை.ப்பொரு ளை.

பாடக் குறிப்பு

(A. Gnanadickam, *Music Teacher*.)

வகுப்பு: 4 அல்லது 5. (பிள்ளைகளின் தராதரத்திற்கு ஏற்றவாறு.)

நேரம்: 45 நிமிஷம்.

உபகரணம்: சூரியகாந்திச் செடி—புஷ்பத்தோடு.

நோக்கம்: 1. ஆசிரியர் கற்பிக்கப்போகும் முதல் அடி நான்கு வரிகளில் உள்ள விஷயங்களைப் பாலர் மனதில் நன்கு பதியச்செய்தல்.

2. இராகமும் தாளமும் ஒருங்கமையும்படி எல்லா மாணுக்கரையும் பாடச் செய்தல்.

3. படித்த பாடலை மறவாமல் இருக்கும்படி, அவர்கள் தாமே பாடிப் பழகும்படி ஊக்குதல்.

பீடிகை: 1. இயற்கைப் பொருள்களையெல்லாம் ஆக்கியோன் கடவுள் என்றும், செயற்கைப்பொருள்களைச் செய்தது பற்பல மனிதர்கள் என்றும் உபாத்தியாயர் பிள்ளைகளோடு சம்பாஷித்து விளக்குதல்.

(உ-ம்) இயற்கைப்பொருள்கள்: சூரியன், சந்திரன், மலை, மேகம், மனிதன், மிருகம், மரம், செடி, புஷ்பங்கள்.

செயற்கைப்பொருள்கள்: மேசை, சட்டை, பானை, etc.

2. இயற்கைப்பொருள்களினுல் மனிதருக்கு ஏற்படும் சாதக பாதகங்களைப்பற்றியும் மாணவரிடமிருந்து விஷயத்தை வரவழைத்து விளக்கலாம்.

பிற்பாடு இயற்கைப்பொருள்களில் ஒன்ருகிய சூரியகாந்தியைப்பற்றி இன்று படிப்போமென்று சொல்லி உபகரணத்தைக் காட்டிப் பாடத்தை ஆரம்பித்தல்.

விஷயம்	முறை
பாட்டு : இயற்கைப் பொருள் என்பார் கடவுள் இயற்றி பார்தந்தார் பல அவற்றுள் பயக்தும் நலனைக் காண் மனஸாந்தி பகர்வோம் அழகு சூரிய காந்தி.	செய்யுளைக் கரும்பலகையில் எழுதுதல். ஆசிரியர் இராகமின்றி தெளிவாய் நிறுத்தி வாசித்தல். பின்னர் மாணவர் உபாத்தியாயரைப் பின்பற்றி வாசித்தல்.
கடின பதங்கள் : பார் = பூமி. தந்தார் = கொடுத்தார். பயக்கும் = உண்டாக்கும். காண் = பார்க்கப்பார்க்க, யோசிக்க யோசிக்க. மனம் = மனது. ஸாந்தி = ஆறுதல். பகர்வோம் = சொல்வோம்.	மாணவர் வாசிக்கும்போது கடின பதங்களுக்கு அர்த்தம் விளக்குதல். அர்த்தம் விளக்கியானதும் க. பலகையைச் சுத்தம்செய்துவிட்டு, விஷயத்தில் கண்டபடி பாட்டை சுரங்களோடு சேர்த்தெழுதவேண்டும்.
ஸரிஸஸ | ஸாஸா | நீநித | பா ; இயற்கை ப்பொ | ருளென் | பார்கட | வுள் ; நிஸரிரி | ரீரீ | ஸநிஸரி | கா ; இயற்றிபார் | தந்தார் | பலஅவற் | றுள் ; கமபப | பாபா | ரிகமம | மாமா பயக்கும்ந | லனைக் | கா.ண்மன | ஸாந்தி ஸரிரீ | ரிஸஸரி | கபகரி | ஸா ; பகர்வோம் | அழகுசூ | ரியகா. | ந்தி ;	உபாத்தியாயர் பாட்டை இராகத்துடன் அதிகசப்தமின்றி பலமுறைப் பாடிக்காட்டவேண்டும். கடினமான சமயங்களில் வாத்தியக்கருவியையும் உபயோகிக்கலாம். பின்னர் மாணவர் ஒருவர் ஒருவராகப் பாடல். மாணவர் பாடும்போது உபாத்தியாயர் உதவிசெய்தல்.

பரீக்ஷை :— கரும்பலகையைச் சுத்தம் செய்துவிட்டு, படித்த பாட்டைப் பாடும்படியாகப் பிள்ளைகளைத் தூண்டுதல்.

க. ப. சு. பாட்டும், சுரமும்.

குறிப்பு: இவ்விதமே மற்ற எல்லா அடிகளையும் போதிக்கவும். எல்லா அடிகளையும் போதித்தபிறகு மாணவர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு அடியாகப் பாடச்செய்யலாம்.

பாடல்களில் வரும் எழுத்துக்களின் பக்கத்தில் . இவ்விதப் புள்ளிகள் எத்தனையுண்டோ அத்தனை தரம் அதற்குமுன் உள்ள எழுத்துக்களின் உயிரை அதாவது அகார உகாரங்களைப் பாடவேண்டும்.

(உ-ம்.) காண் மன = "கா ஆண் மன" என்று அணுக்கிப் பாடுக.

வாழை இனம்

S. Mariadas, *Teacher*, *Ramnad.*

ஆந்திர நாடு

1. அம்ருதபாணி
2. ஏற்றசக்ரகேளி
3. கற்பூரசக்ரகேளி
4. கினி
5. கொம்மாடி
6. சக்ரகேளி
7. நல்லசக்ரகேளி
8. பதீசா
9. பூடிதபொந்தன்
10. பொந்த
11. பொந்தபதீசர்
12. வாமனகேளி
13. ஜகன்னாதகேளி
14. ஜாதிகேளி
15. ஸ்போட்டோ

தமிழ் நாடு

1. ஆனைக்கொம்பன்
2. உதிரம்வாழை
3. கட்டளபூதன்
4. கதலிவாழை
5. கரிவாழை
6. களூர்மொந்தன்
7. குழிவாழை
8. தேன்வாழை
9. நேந்திரவாழை
10. பச்சைநாடான்
11. பூவனசுண்டான்
12. பூவாளை
13. பேயன்
14. பேய்பொந்தன்
15. மட்டல்வாழை
16. மணிலா
17. மலைவாழை
18. ராஜாரஸ்தாளி
19. ராஜாவாழை
20. ரஸ்தாளி
21. வயல்வாழை

பொது

1. கல்வாழை
2. கிண்டிவாழை
3. செவ்வாழை
4. தொரைவாழை
5. நமரைவாழை
6. பங்காளா
7. லாடம்
8. விசிறிவாழை
9. ஜாடிவாழை

நமது சிறுவர்களின் சுகாதாரம்

(Motcham)

வையகத்தில் மானிடர்க்கு என்றுமழியாச் செல்வம் கல்வியொன்றே. அதைக்கைக்கொள்ள, பால்யப்பிராயமே சாலச் சிறந்தது. கல்வியை நமக்கு நல்குவது பள்ளியே. அதைப் புகட்டுவது ஆசிரியரே. ஆனதுபற்றி பள்ளியில் பயிலுங்காலை, இளம்சிறார்களது உடலும், புத்தி தீக்ஷண்யமும், நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்துவருகிறதா என்பதைக் கவனித்துவருவது ஆசிரியர் அனைவர்பாற் ஏற்பட்ட கடமை.

பண்டைக்காலத்தார், இளம்பிராயத்தைக் குறித்துச் சில தப்பறையான எண்ணங்கொண்டிருந்தார்கள். அஃதென்னவெனில் இளைஞர்பால், எக்கலையையும் கட்டாயப்படுத்திப் புகட்டிவிடலாமென்பதும், அவர்களும் பரீக்ஷாதிகாரிகளின் கேள்விகளுக்கு மளமளவென்று, தங்கள் கிள்ளை ஞானத்தை உமிழ்ந்துவிடுவார்களென்பதுமே. இப்போது நவீன ஆராய்ச்சியாளர், மனோதத்துவ சாஸ்திரத்தின்படி, குழந்தைகளின் இயற்கைவன்மையும், அபிலாஷையும், வேறுபட்டிருக்கின்றனவென்றும், உடல் நிலையால் மாணவர் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறதென்றும் கண்டுபிடித்துள்ளார்கள். ஈண்டு அவ்வாறு, குழந்தைகளிடம் காணப்படும் வியாதிகளையும், அவற்றிற்குப் பள்ளியில் ஆசிரியனாற்றும் பணிகளையும் ஆராய்வோம்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதுபோல போதிய வளர்ச்சிக்குத்தக்க சான்று திடகாத்ர உடலே. நம் பாரத நாட்டில் அநேகமாய்ப் பாலக, பாலகிகள் பலவீனமாயிருப்பதின் காரணமென்ன? நாட்டின் வறுமைப்பிணியும், பெற்றோரின் சரியான போஷிப்பின்மையும், போதிய ஆகாரம் தகுந்த வேளைகளில் கிடைக்காததும், சரியான சத்துள்ள உணவு இல்லாததுமே. இன்னும் இளம் குழந்தைகளின், அதிக உழைப்பும், நகர வாழ்க்கையும், பிறிதொரு காரணமென யூகிக்கப்படுகின்றது. இதற்குமாறாய் ஓர் ஆங்கிலேயக் குழந்தையைக் கவனித்தால், எவ்வளவு திடகாத்ரமாய்

182294

முகவசீகரமாயுளது! காரணமென்ன? சிறுபிராயத்தில் கொடுக்கும் ஓவல்டின் பால், முதலியவைபோன்ற சத்துப் பொருள்களே.

புஷ்டியுள்ள குழந்தைகளின் உடல் மினுமினுப்பாயும், திரண்ட முகம்வாய்ந்து, வசீகரத்தன்மை கொண்டுளது. குழந்தைகளின் கேசம் அபரிமிதமாயும் பளபளப்பாயுமிருந்து அலங்கிர்த சின்னத்தை அளிக்குமாயின் அக்குழந்தை அதிக திடகாத்ரமுடைய உடல் கொண்டிருக்கின்றதென்பது நன்குப் புலப்படும். அப்படியல்லாது கேசம் வெகு கலக்கமாயும், எண்ணெய் தேய்க்காததாலும், இன்னும் பல காரணங்களாலும், சடைப்பின்னலும், மேல்தோல் காய்ந்து தவளைபோல் சொரிச்சொரியாயும், சினப்புகள் எங்கும் பரவியும், இன்னும் நகங்களைக்கொண்டு தேகத்தைப் பிராண்டியதால் உண்டான புண்களும் புள்ளிகளும் நிறைந்திருந்தால் பலமற்ற குழந்தை என்பது எளிதில் புலனாகும். இத்தகைய குழந்தைகளை நாம் கண்டிருக்கிறோமல்லவா? இவற்றிற்குச் சரியான முறைகளைப் பெற்றோர் கையாட ஆசிரியர் ஆலோசனை கொடுத்துதவுதல் வேண்டும்.

பாடசாலையில் புஷ்டியற்ற குழந்தைகளிடம் வெகு சாதாரணமாய்க் காணக்கூடிய வியாதிகள் அநந்தம். அவைகளில் மிகவும் எளிதில் அநேகமாய்ப் பாலர்கொண்டுள்ளது (Rickets) கணைச்சூடு; (Debility) பலவீனம்; (Anæmia) சோகை; அல்லது பாண்டு.

கணைச்சூடானது தேகபலத்தை முழுதும் உரிந்து, விற்போன்ற கால்கள், கூட்டு நெஞ்சு, முதுகெலும்புக்கோளாறுகள் முதலியவைபோன்ற அவரூபங்களை உண்டுபண்ணும். இச்சூட்டினுல் தொல்லைப்படுவோர் வெகு எளிதில் மூர்ச்சையாகி விடுவார்கள். அப்பேர்க்கொத்தவர்களுக்கு வேளா வேளைகளில் சிறிது இளைப்பாற்றி நேரமும், ஆதித்தன் வெளிச்சமும், சுத்த ஆகாயமும், நல்லுணவும் கொடுத்தல் சிறந்தது.

பலவீனத்தால் அல்லலுறுவோர்பாட்டை எவ்வாறு பகர்வது! சிலர் நடக்கமுதலாய்ச் சக்தியற்றும், காற்றடித்தாலும் விழும்தன்மைகொண்டுள்ளார்கள். உடல் மெலிந்து எலும்புகளெல்லாம்கூட சில சமயம் வெளித்தோன்றும். இவர்களின் விழிகள் ஆழ்ந்தும் கண்களைச்சுற்றி கருமை நிறமான வளையங்கள் காணப்படும். இவர்களைப் பார்த்தாலே நமக்குப் பரிதாபமேற்படும்.

சோகை என்பது பலவீனம். இந்தச் சோகையைக் கொண்டவர்களின் மேல்தோலும், உதடுகளும், ஈறும் (முரசு) பழுப்பு நிறமாய் இருக்கும். இவர்கள் மூச்சு வாங்கவும் வெளி விடவும் அவஸ்தைப்படுவார்கள்.

இத்தகைய நோய்களை அகற்ற, போஜனம் குறித்த நேரத்தில் நன்ருய்ச் சமைத்துப் பலவித சத்துப்பொருள்களுடன் சேர்த்துப் பரிமாறினல் உயிர்நிலையையும் உன்னத புஷ்டியையும் ஊட்டும். இவ்விஷயத்தில் உபாத்தியாயர் எவ்வாறு உணவைத் தயாரிப்பதென வினவுவீரோ? நம் நாட்டில் எத்தனையோ கொடையாளிகள், கனதனவான்கள் உளர். அவர்களையண்டி ஆசிரியர், புஷ்டியற்ற மாணவர்களுக்குப் போஜனம் அளிப்பதற்காக ஓர் ஏற்பாடு செய்வதாகக்கூறி, பண உதவி பெற்று பள்ளிக்கூடத்திலேயே இதைச் செய்யவேண்டும். இது தகி எத்தனையோ பாடசாலைகளில் மாணவர்க்கு, நடுப்பகற் போஜனம் பரிமாறப்பட்டு வருகின்றது. இது நாம் கண்கூடாகப் பார்த்தது.

பலம் குன்றிய மாணவன் கல்விச்சாலை வந்து கலைபயில இயலாதவனுவான். ஆகையால் நோய்வாய்ப்பட்டு வருந்தும் பாலரைப்பற்றி, உபாத்தியாயர் பெற்ருேருக்கறிவித்து வைத்தியர் உதவிகொண்டு வியாதியைத் தீர்த்துத் திடனடையச் செய்தல் அவசியம். இது விஷயமாய், வருஷத்திற்கொரு முறையோ, அல்லது அதற்கதிகமாகவோ டாக்டர் பரிசோதனை பள்ளிதோறும் நடத்தப்படவேண்டும். பையன்கள் பலவீனமாயிருந்தால் டாக்டர் அத்தாட்சிப் பத்திரத்துடன் வீட்டிலிருக்கச்செய்யவேண்டும். தேகத்தைத் திடப்படுத்த, பள்ளியில் அநேகவித தேகாப்பியாசங்களும், விளையாட்டுகளும் நடைபெறல் நலம்.

இது தவிர்த்து, சிரங்கு, அம்மைபோன்ற ஒட்டுநோய், தொத்துவியாதிகள், இருக்கக்கண்டால், வியாதியால் பீடிக்கப்பட்ட மாணவன், அப்புறப்படுத்தப்படுவதுமன்றி வகுப்பறைச் சாமான்களையும் அப்புறப்படுத்தி, தேகாரோக்கிய உத்தியோகஸ்தருக்கு (Health Officer) தெரியப்படுத்தவேண்டும்.

உங்களுக்குத் தெரிந்ததுபோல் அம்மை, காலரா இவைகளெல்லாம் தொத்து வியாதிகள். வெகு சீக்கிரத்தில் பாவிவிடும் மற்றவர்களுக்கும். ஆகவே அம்மையால் வரும் அவதியைப்போக்க, அம்மை குத்திக்கொள்வது நலம். மேலும்

மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் நமது தென்னிந்தியா அதிக உஷ்ணமுள்ளது. இக்காலங்களில் நாம் வெப்பத்தால் அதிகமாகத் தாக்காதபடிக்கும், அம்மை, கொப்பளங்கள், வேக்கூறு இவைகளைத் தடுப்பதற்கும் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய, ஆரஞ்சுபோன்ற பழவர்க்கங்களையும், தயிர், பால், மோர் போன்ற உணவுப்பொருள்களையும் ஆகாரத்தோடு சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மாணவர் நிற்பதிலும், உட்காருவதிலும், வாசிக்கும்போதும், எழுதும்போதும், கூனிக்கொண்டும், கோணலாகவும், சாய்ந்துக்கொண்டும் உட்காருவதால் துளிர்த்துத்தழைக்கும் எலும்புகள் வளைந்து விகாரமாகிவிடும். சிலர் ஒரு நேரத்திற்கு ஒரு நடை நடப்பார்கள். சிலர் ஒரு பக்கம் சாய்ந்தும் நடப்பார்கள். "அன்னநடை நடந்து தன்னடை இழந்தவர்கள்" என்றால் இவர்கள்தான். இவைகளைச் சீர்திருத்தி நற்பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளக் கீழ்வரும் விதிகளை அநுசரித்தல் உசிதம்:—நிற்கும்போது தலையை நிமிர்த்தி நேராகவும், உட்கார்ந்திருக்கும்போது, முதுகை வளைக்காமல் நிமிர்ந்தும், கால்களைத் தரைமீது செங்குத்தாய் வைத்துக்கொண்டும், வாசிக்கும்போது புத்தகத்தை இடது கையால் பிடித்து, கண்களுக்கும் புத்தகத்துக்கும் இடையிலுள்ள தூரம் 12" இருக்கும்படி வைத்து வாசிக்கவேண்டும். திண்ணைப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை நீங்கள் கவனித்தால் அவர்கள் புத்தகத்தால் முகத்தை மூடித் தங்கள் சத்தம் கேளாதபடி வாசிப்பார்கள். இவைகளையெல்லாம் ஆசிரியர் திருத்தவேண்டும். எழுதும் தருணத்தில், சௌகரியமாய் உட்கார்ந்துகொண்டு, காகிதத்தை மேஜைக்கு ஸமாந்தரமாய் வைத்து இரு கரங்களும் பலகைமேல்வைத்து, எழுதப்பழகவேண்டும். தொடரும்.

ஒரு பையன் முதுகில் மற்றொரு பையன் வெகு பலமாக எதையோ வைத்து தன் கையினால் தேய்த்துக்கொண்டிருந்தான்.

உபாத்தியாயர் அவனைப் பார்த்து,

"என்னடா அவன் முதுகில்?"

"அவன் முதுகில் 'மை' கொட்டிவிட்டது, அதை ரப்பரால் தேய்த்து அழைச்சுடறேன் சார்!"

கல்வித்துறையில் கற்கும் கைவேலைகள்

(Educational Hand Work)

S. G. Naidu, *Manual Training Instructor.*

(கொத்து 31, மலர் 3, பக்கம் 81-ன் தொடர்ச்சி)

Exercise 12. கால்சட்டை :—

Stage I Stage II



Exercise 11-ல் Stage II-ல் காட்டியபடி மடித்துக் கொண்டு அதில் (படத்திற்கு) வடபுறமும் தென்புறமும் உள்ள C என்னும் பாகங்களை மாத்திரம் நிமிர்த்திவிட்டால் அது இப் படத்தில் Stage I-ல் காட்டியபடி உருவமடையும். இதில் A என்னும் பாகங்களைக் கொஞ்சம் விரித்துக்கொண்டு B என்னும் பாகங்களை ஒன்றின்மேல் மற்றொன்று பொருந்தும்படி மடித்துக்கொண்டு மறுபடியும் ஷை A என்னும் விரிந்த பாகங்களைப் பின்புறமாக விரித்து நிமிர்த்திவிட்டால் அது Stage II-ல் காட்டிய கால்சட்டையின் உருவமடையும்.

Exercise 13. சட்டை :—

ஷை Exercise 12-ல் Stage II-ல் 'க' என்னும் பாகத்தை சட்டைக்குக் கழுத்தாகவும், 'ங' என்னும் பாகத்தை சட்டைக்கு இடுப்புப்பக்கமாகவும் வைத்துக் கொண்டு ஷை 1 என்னும் பாகங்கள் 2 என்பவைகளின்மேல் படியும்படி மடித்துவிட்டோமானல் அதுவே சட்டையாகும். C என்பவைகள் சட்டைக்குக் கைகளாகும்.



N. B. Exercise 12-ல் Stage II-ல் 'க' என்னும் பாகத்தை (படத்திற்கு) வடபுறத்திலேயே வைத்துக்கொண்டு 'ங' என்னும் பாகத்தை (படத்திற்கு) தென்புறத்தில் மடிக்கவும்.

(தொடரும்)

ஓர் ஆழ்ந்த யோசனை

S. Sebastian, *H. S.*

45 என்னும் நம்பர் ஆச்சரியமான குணங்களை உடையதெனப் பெரியோர்களால் கூறப்படுகிறது.

ஷை நம்பர் 4 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஷை 4 பாகங்களில் ஒன்றாவது பாகத்தோடு 2-ஐக் கூட்டினுலும், இரண்டாவது பாகத்திலிருந்து 2-ஐக் கழித்தாலும், மூன்றாவது பாகத்தை 2-ஆல் பெருக்கினுலும், நான்காவது பாகத்தை 2-ஆல் வகுத்தாலும், கூட்டுத்தொகையும் கழித்துவந்த மீதியும், பெருக்கிவந்த தொகையும், வகுத்து வந்த ஈவும் எல்லாம் ஒரே நம்பராக இருக்கவேண்டும்.

அந்த நம்பர்—10.

பாகம் பண்ணப்பட்ட நம்பர்கள் முறையே 8, 12, 5, 20.

இந்த நான்கு நம்பர்களும் சேர்ந்து 45 ஆகும்

நடுவெழுத்தலங்காரம்

Thomas J. Jesuadian Cardoza S. 2.

சீதமதி வதனமுறு திருமரியின் அருளினாலே
செப்பிட்டேன் அன்புடனே நடுவெழுத்தின் அலங்கலொன்று
சீதமிகு காலமதில் விளக்கில் விழும் பூச்சிப்பெயரும்
சலம்வற்றா திதம்பயக்கும் இந்தியாவின் நதிப்பெயரும்
சாதனையாய் சிப்பாய்கள் கலகம்செய்த ஊர்ப்பெயரும்
சோபிதமார் நவீனக்கல்வித் திட்டத்தின் அரும்பெயரும்
ஆதரையில் மாந்தர் உண்ணுமோர் தான்யப்பெயரும்
அபரிமித மாகத்தீங்கை இழைத்திடும் பூச்சிப்பெயரும்
மாதிறங்கொள் மகாராட்டிர சிறந்தவொரு மன்னன்பெயரும்
மலரதிலே மதுதனையே உண்டுவக்கும் பூச்சிப்பெயரும்
சோதரரே நவின்றிடுவீர் நடுவெழுத்தைக் கூட்டிச்சேர்க்கின்
சுகிர்தமுறும் ஒருகல்விக் கழகமதின் தலைவராவர்

குறிப்பு :—முதல் விடை ஈசல்.

இருகதைக் கவிகளுக்கு விடை

(கொத்து 31 மலர் 3, 82-ம் பக்கம் பார்க்க)

A. James S. I.

1. பெருக்கினால்.
2. அணிகளால்.
3. தாமரையால்.
4. மதி.
5. வாசுகி.
6. மீனால்.
7. அடிப்பாரற்று
8. ஆற்றுவாரற்று.
9. மானம்பார்த்து.
10. பால்வற்றி.

யோசனாவிருத்திச் செய்யுளின் விடை

M. Visuvasam, S. I.

1. நாலெழுத்தாலான "நகரம்" என்ற நற்பதமதனை
நாகரீக மடைவதற்கோர் நல்லிடமென நவில்வர்
நாலெழுத்திலாதியை யகற்றிநோக்கின் நம்மவர்க்
குஉபகாரியாகும் "கரம்" என்னும் சொல்லென்பர்
நாலெழுத்தில் நடு விரு மாறிநிற்பின்
நரரடையும் "நரகம்" என்னும் தண்டனையாம்,
நாலெழுத்தில் ஆதிநீங்க நாம் கூறும் பிரிவின்
பொருளது 'ரகம்' எனப் பகர்ந்தேன்பாவினாலே.
நண்பர்களே செய்யுளினால் விடையை நவிலுவீரே.

பீமனின் தண்டாயுதம்

V. M. Maria Arul, S. 2.

அப்படா, இவ்வளவு நாள் காத்துக்கொண்டிருந்ததற்கு இன்றுதான் விடிந்ததோ. என் தலைமையின்கீழ் முப்பது ஆசிரிய மாணவர் பின்தொடர்ந்தனர். இரவு 1-30 திருச்சி ஜங்ஷனில் வண்டியேறிவிட்டோம். நாகப்பட்டணத்திற்கு உல்லாசப்பிரயாணம். வண்டியும் நகர்ந்தது. என் கையில் நான்கு வரிகள்கொண்ட ஒரு காகிதம் இருந்தது. அதைப் பார்த்துப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே தலையாட்டம் ஏற்பட்டது.........

Manners maketh man, Mind maketh man, Learning maketh man, and Home maketh man...இந்த நான்குவித எண்ணங்களும் திடீரென்று நான்கு இராக்ஷத உருவத்தை யடைந்தன. முதல் ஆள் சர்ச்சில், இரண்டாவது ஹிட்லர், அடுத்தவர் ஸ்டாலின், கடைசி யாரோ ஒருவர். ஒருவரை யொருவர் பார்த்து முணுமுணுத்துக்கொண்டு இருக்கும் பொழுதே சர்ச்சில் எழுந்தார். மூக்குக் கண்ணுடியைத் துடைத்தார். கைக்கோலைக் கக்கத்தில் இடுக்கினார். அவர் கூற்று: "உலகத்தில் பிறந்த எவனுக்கும் அவனுடைய நடத்தையே பிரதானம். சிறு காரியத்திலும் முதலாய், மனதில் முதலாய்த் தொந்தரவு செய்தல் கூடாது. ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொரு உத்தியோகத்திற்கும் விதவித ஆச்சாரங்கள் உள. சரிவன அறிந்து, சமூகத்தோடு பழகவேண்டும். ஆனால் இந்த நாஜிகளுக்கிடையிலோ......என்றவுடனே

ஹிட்லர் எழுந்தார். ஒட்டு மீசையையும் முறுக்கினார். முகத்தில் நழுவிவிழுந்த தன் மயிரையும் ஒதுக்கிவிட்டார். "'சைக்காலஜி' தெரிந்தால் சர்ச்சில் அப்படிப் பேசமாட்டான். ஒரு காரியத்தைச் செய்யச்சொல்வது மனம். அது ஒரு வயல். அதில் ஞானம், தேசிய உணர்ச்சிகளை விதைத்தால், விதையொன்று போட, முளையொன்று வருமா? குணசாலியாய் இருந்தால் இந்தக்காலத்தில் வீண். இள வீரர்களைத் தன்வசப் படுத்தி, அறிவு தெளிந்த ஒருமனதால் உலகத்தை நடத்துவதே, இக்காலத்தின் மகிமை" என்று வீர சிங்கம்போல் கர்ஜனை செய்துகொண்டு இடதுபக்கமாய்த் திரும்பியவுடன்...

பட்டென்று எழுந்தார் ஸ்டாலின். காலர்களையும் ஆக்ஸ்பர்டு கிராப்பையும் தடவினர். "மனிதன் பிறந்தென்ன வாழ்ந்தென்ன, தன் இஷ்டப்படி படிக்கவேண்டும். காரியங்களைத் தானே உணரவேண்டும். தன் இஷ்டப்படி நடக்கவேண்டும். புத்தக வாயிலாகவும், அனுபோகத்திலும் கற்றவற்றைப் பிறருக்குக் காட்டவேண்டும். மிருகத்திற்குள்ள உணர்ச்சிகள் மனிதருக்கு உள. மனிதருக்குள்ள சுயாட்சி, ஞானம் மிருகங்களுக்குள் கிடையாது. மற்றவர்கள் சொல்லியாவது சர்ச்சில், ஹிட்லர் போதகங்கள் அவர்களுக்குள்ளேயிருக்கட்டும். தெரிந்தமட்டும் அறிந்து, முடிந்தமட்டும் நடக்கக்கடவான்" என்று சொல்லி முடியுமுன் நான்காவது பேர்வழி தொங்கியைத் தூக்கிக்கொண்டு எழுந்தனர்.

தும்மலுக்கும் செருமலுக்கும் குறைச்சல் இல்லை. தலைமயிரைத் தட்டினர். "பாலர்கள் பெற்றோர் கையில் இருக்கின்றனர். அவர்கள், பின்பற்றுவதில் கெட்டிக்காரர். தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை. அப்பனைப்போல் பிள்ளை தப்பாமல் பிறக்கும். பெற்றோர் எப்படியோ பிள்ளைகளும் அப்படியே. வீட்டில் எப்படியோ, வெளியிலும் அப்படித்தான். வீட்டில் உள்ள சந்தர்ப்பங்களே பிள்ளைகளைப் பிற்கால மனிதனுக்கும் பிரச்சாரங்கள். நீங்கள் மூவரும் அண்டப் புழுகர்கள், யாருடைய அபிப்பிராயம் ஜெயிக்கும் என்பதை ரூபிக்க சண்டைதான் உபகரணம். வாங்கடா குஸ்திக்கு!......

பயங்கரம். நான்குபேரும் ஒருவரையொருவர் நோக்கி உறுமினர். குமுறினர். கைகளையும் கால்களையும் தட்டிக்கொண்டனர். யார், யாரோடு சண்டை செய்வதெனத் தெரியவில்லை! ஒருவர்மேல் ஒருவர் விழுந்து, புரண்டு புரண்டு, மல்யுத்தம் பலமாய் நடத்தினர். ககனகோளமும், புவனகோளமும் சண்டையிட்டு, மண்டையுடைத்து இரத்தம் பீறிட்டதுபோல், "சோ...படார்......படார்...விண்ணுலகமிடிந்து மண்ணுலகின் மேல் விழுந்து உடைவதுபோலத் தோன்றிற்று. இதென்ன அகோரக் காக்ஷி. விழுந்து உடைந்த கோளத்தினின்று பீமன் தோன்றினன். "போதும் அட்டகாசங்கள். இன்றோடு ஒழியுங்கள்" என்று, தன் கையிலிருந்த தண்டாயுதத்தால், ஒரே அடியில் நால்வரையும் பஷ்பமாக்கினன். கைப்பிடி, தற்செயலாய் என் மண்டையில் விழுந்து திடுக்கிட்டேன். என் முன் ஒரு புஸ்தகம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. "Imagination" என்ற தலைப்பு என் கண்ணில் பட்டது. மனோபா

வனை என்ற பாடம் உண்மையாகவே தன்னில் இழுத்துக் கொண்டதென்றும், என்னருகில் படித்துக்கொண்டிருந்த, நேச ரொருவர் தூக்கத்தில் என் மண்டையில் முட்டினுரென்றும் அறிந்து நான் விழித்த விழியும், அவருடைய வெட்கம் நிறைந்த பார்வையும்கொண்ட காட்சியை நீங்களே மனோபாவனை செய்துகொள்ளுங்கள்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

11—9—40: இன்று மாலை இப்பாடசாலை "ஆசிரியர் சங்கத்தின்" மாதாந்தரக்கூட்டம் இப்பாடசாலைத் தலைமையாசிரியரின் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று. அவ்வமயம், சென்ற மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற T. S. L. C. பரீட்சையில் இப் பாடசாலை ஸெக்கண்டரி, ஹையர் எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் மிகவும் மெச்சத்தக்கவிதமாய்த் தேறினதை முன்னிட்டு, தலைமை ஆசிரியர், உதவி ஆசிரியரனைவர்க்கும் ஓர் "சிற்றுண்டி" (Tea Party) அளித்தனர்.

சிற்றுண்டிக்குப்பின் தலைமை ஆசிரியர் எழுந்து இப்பாடசாலையின் முன்னேற்றத்தின்பொருட்டு ஆசிரியர் அனைவரும் இதுகாறும் அயராமல் உழைத்து வந்ததுபோல் இனிமேலும் அதிகமதிகமாய் உழைக்கவேண்டுமென்பதைப்பற்றிக் கூறிய பின்னர் ஆசிரியர்கள் அன்னவர்க்கு நன்றிகூறவே, கூட்டம் இனிது முடிந்தது.

12—9—40: இன்று காலை எமது மாணவர்கள் எல்லோரும் கல்லணைக்கு (காவேரிநதியின் அணைக்கட்டு) உல்லாசப் பிரயாணம் சென்றனர். ஆங்கு அவர்கட்கு விருந்து (Picnic) நடத்தப்பட்டது. உல்லாசப் பிரயாணத்தின் பயனை எய்திய மாணவர்கள் மாலை இன்புடன் இருப்பிடம் திரும்பினர்.

17, 19, 23-ம் தேதிகளில் நமது மாணவர்களின் அறிவு பெருக்கத்தின்பொருட்டு "கல்வி சம்பந்தமான விஷயங்களை" நமது பாடசாலை ரேடியோவின் (Radio) மூலமாய் அவர்கள் கேட்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

30—9—40: வெளிப்பாடசாலைகளுக்குச்சென்று போதனை பயிற்சிபெறும்வண்ணம் இன்று பிற்பகல் நமது பாடசாலை மாணவர்கள் குறிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

பழைய மாணவர் பக்கம்

J. Koilpillai, *H. M.*, (*Old Student*),
T. D. T. A. Ele. School, Kumarapuram.

பாலர் உற்சவமும் சுற்றுப்பிரயாணமும்

5-9-'40 காலை கதிரவன் வானேற எம் பள்ளி மாணவர் என்றுமிலா குதூகலத்துடன் புறப்பட்டனர் 3 மைல் தூரமுள்ள நாகலாபுரம் நோக்கி.

காலை $8\frac{1}{2}$ மணிக்கு நாகலாபுரத்திலிருக்கும், எம் பள்ளி மானேஜர் அவர்களின் பங்களாவை, இனிய குரலோசையுடன் பாட்டுப் பாடிக்கொண்டே வந்தடைந்தோம். சிறிது நேரத்துக்குள் நாகலாபுரம் சர்க்கிளைச் சார்ந்த சுமார் 20 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் வந்து குழுமினர். தனிப்பட ஒவ்வொரு மாணவனும், பற்பல பாடசாலை மாணவர்களைக் கண்டவுடன் அடைந்த ஆனந்தம் கூறுந்தரமன்று.

பகல் $9\frac{1}{2}$ மணிக்கு எல்லா பள்ளி மாணவர்களும், உபாக்களும், மானேஜர் அவர்களும் அணிவகுத்து, "அன்பரே கூடுங்கள்" என்ற இனிய கீதத்தைப் பாடிக்கொண்டே ஆலயம் அடைந்தோம். அங்கே பாலர் ஆராதனையும், பாலர்க்கேற்ற கதை பிரசங்கங்களும் நடாத்தப்பட்டன. பின்னர் சிறுவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள், ஏலம் விடப்பட்டது.

மத்தியானம் 12 மணிக்கு அறுசுவையுடன் ஆகாரம் அருந்தினம். பின் ஆங்காங்குள்ள சோலைபோன்ற மரங்களிடையே இளைப்பாறினோம்.

பிற்பகல் 2 மணிக்கு, பாளையங்கோட்டை சாரா டக்கர், பெண்கள் போதனுமுறைப் பாடசாலை பிரின்சிபால் Miss D. M. லப் ராய் அம்மாள் தலைமைவகிக்க, பாட்டுப் பரிசுக்கூட்டம் நடைபெற்றது. தனித்தனி பாடசாலை மாணவர்களும், இனிய நவீன ராகங்களில் பாக்கள் பாடினர். யான் ஆர்மோனியம் வாசிக்க எம் உதவி உபா: K. N. Abraham அவர்கள் மிருதங்கம் தட்ட "உந்தன் மகிமையை விளக்கிடவேதான்" என்ற பாட்டை இனிமையாக எம்மாணவர்கள் பாடினர்.

பின் வேதாகம பரீட்சையில் தேறினவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. எம் பள்ளி மாணவர்கள் 5 பரிசில்கள் பெற்றனர்.

மாலை 4 மணிக்கு ஸ்தோத்திரக் கீதம்பாடி, பாலர் உற்சவம் இனிதுடன் முடிய, தத்தம் ஊர் ஏகினர்.

நாங்கள், ஆங்குள்ள பரி. ஆல்பன்ஸ் உயர்தரப் பாடசாலையையும், பரி. பர்ணபாஸ் ஆஸ்பத்திரியையும், வாரமொரு தடவை கூடும் சந்தை தினம் அன்றாதலின் சந்தையையும், வரும் வழியில் உள்ள 2 பஞ்சு யந்திரசாலைகளையும் பார்வையிட்டோம்.

இறுதியாக, நடந்த வைபவங்களையும், கண்ட காட்சிகளையும்பற்றி சம்பாஷித்துக்கொண்டே நாட்டு வாகனத்தில் பிரயாணம் செய்து எம் சொந்த ஊர் ஏகி, தம்தம் இல்லம் ஏகினோம்.

பழைய மாணவர் சங்கம்

(R. Pitchai, *Secretary*.)

22—8—'40 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு நடந்த இச்சங்க உபகமிட்டிக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள்.

14—3—'40-தில் இப்பாடசாலையில் கூடிய சங்கக் காரியக் கமிட்டியில் தீர்மானித்தபடி, நம் பழைய மாணவர் சங்கத்தின் உபகமிட்டிக்கூட்டம் ஒன்று 22—8—'40 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு தாய் பாடசாலையில், சங். A. Lourdusamy, B.A.,L.T. அவர்கள் தலைமையின்கீழ் நடந்தேறியது. மேற்சொன்ன காரியக் கமிட்டிக்கூட்டத்தில் தீர்மானித்தபடி உபகமிட்டியார் ஆலோசனைசெய்து, அடியிற்கண்ட விதிகளைத் திட்டம் செய்தனர். அவை பின்வருமாறு :—

I. பெயர் :

நமது பழைய மாணவர் சங்கமானது, "திருச்சி திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலைப் பழைய மாணவர் சங்கம்," என்றழைக்கப்படும்.

II. நோக்கம்:

1. நமது பாடசாலையின் பழைய மாணவருக்குள் சகோதரத்துவம் ஏற்படுத்துவது.

2. தாய்ப் பாடசாலைமட்டில் அவர்களுக்குரிய அபிமானத்தை வளர்ப்பது.

3. போதனுமுறைகளின் நவீனங்களை அவர்களுக்கு அறிவுறுத்துவது.

III. வழி வகைகள்:

1. வருஷாந்தர பழைய மாணவர் கூட்டம் தாய்பாடசாலையில் கூடுவது.

2. போதனுவிஷயப் பூங்கொத்து.

3. ஆசிரிய திருத்தப் பயிற்சிகள் (Refresher Course).

4. பற்பல இடங்களில் கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்து, தாய்ப்பாடசாலையோடு கடிதப்போக்கு வரவு முதலிய சாதனங்களால் இணைப்பது.

இவைபோன்றவற்றைக்கொண்டு மேற்படி நோக்கங்களை ஈடேறச் செய்வது.

IV. அங்கத்தினர் (Members):

இப்பாடசாலையில் பயிற்சி முடிந்த ஒவ்வொரு பழைய மாணவரும் அங்கத்தினராகலாம். இதற்குக் கட்டணம் ஒரு வருஷத்திற்கு Re. 1|—(ஒரு ரூபாய்). இக்கட்டணமானது, பாடசாலையில் வருஷாந்தர பழைய மாணவர் கூட்டம் கூடுமுன் செலுத்தப்படவேண்டும்.

V. உப அங்கத்தினர்:

1. **ஆயுள் அங்கத்தினர் (Life Members)**:—ரூ. 20|—(இருபது) ஒரே தடவையில் செலுத்தும் பழைய மாணவர்கள் எல்லோரும் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினராவர். அல்லது குறைந்தது ரூ. 5|–(ஐந்து) முதல் வருஷத்திலும், மீதி ரூ. 15|–(பதினைந்து) அடுத்துவரும் 3 (மூன்று) வருஷங்களுள் செலுத்திப் பூர்த்தி செய்யும் பழைய மாணவர்கள், மேற்படி ரூ. 20|–(இருபது) பூர்த்தியான தேதி முதல் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினராவர்.

2. பரிபாலகர் (Patrons): ரூ. 50/-(ஐம்பது) ஒரே தடவையிலாவது, அல்லது இரு தவணைகளிலாவது செலுத்தும் பழைய மாணவர்களும், ஏனைய கனவான்களும் சங்கத்தின் பரிபாலகராவர்.

3. கௌரவ பரிபாலகர் (Hony. Patrons): கௌரவ பரிபாலகர்களை சங். தலைவர் சுவாமியவர்கள் பார்த்துத் தெரிந்துக்கொள்ளலாம்.

4. உபகாரிகள் (Benefactors): சங்கத்திற்காக நன்கொடை உதவும் யாவரும் சங்கத்தின் உபகாரிகளாவார்கள்.

VI. உரிமைகள்:

1. சங்கத்தின் அங்கத்தினராகவும், உப அங்கத்தினராகவும் இருந்துவரும் பழைய மாணவர் யாவருக்கும் யாதாமொரு பிரத்தியேகக் கட்டணமின்றி இலவசமாகப் பூங்கொத்து மாதாந்திரப் பத்திரிகை வருட முழுவதும் அனுப்பப்படும்.

2. தாய்ப் பாடசாலையில் சமயா சமயங்களில் நடைபெறும் திருத்தப்பயிற்சியில் (Refresher Course) பங்கெடுத்துப் பிரயோசனமடைதல்.

3. வருஷத்திற்கோர்முறை தாய்ப்பாடசாலையில் நடைபெறும் "பழைய மாணவர் தின"க் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளல்.

4. சங்கத்தின் அங்கத்தினர் யாரேனும் இறந்துபோனால், அதையறிந்தவுடன், அன்னவரின் மரண அறிக்கையைப் பூங்கொத்தில் பிரசுரிப்பது.

VII. ஞான உரிமைகள்:

1. வருஷாவருஷம் தாய் பாடசாலையில் நடைபெறும் "தியானத்தில்" கலந்துகொள்ளும் அங்கத்தினர்களுக்கு சொற்ப செலவில் வசதிகள் அமைத்துக்கொடுப்பது.

2. சங்கத்திற்காகச் செய்யப்படும் பூசைகளிலும், ஜெபங்களிலும்; பிரார்த்தனைகளிலும் அங்கத்தினர் பங்கடைதல்.

3. அங்கத்தினர் யாரேனும் இறந்துபோனால், அதையறிந்தவுடன் அன்னவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசை ஒன்று புரிவது.

VIII. உத்தியோகஸ்தர்கள் (Officials):

1. **தலைவர்:** தாய்ப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் அவர்கள் சங்கத்தின் நிரந்தர தலைவராவர்.

2. **உபதலைவர்கள்:** தாய்ப்பாடசாலை உபாத்திமார்களில் இருவர் உபதலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. **காரியதரிசிகள்:** உள்ளூர் பழைய மாணவர்களில் ஒருவரும், வெளியூர் பழைய மாணவர்களில் ஒருவருமாக, இருவர் கூட்டுக்காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. **பொக்கிஷதார்:** உள்ளூர் பழைய மாணவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. **காரிய நிர்வாகக் கமிட்டி:** மேற்படி உத்தியோகஸ்தர்களோடு, கூடுமானவரையில், ஜில்லாவாரியாக பிரதிநிதித்துவம் வாய்ந்த 15 பழைய மாணவர்களும் (அங்கத்தினர்களுள்) சேர்ந்து காரிய நிர்வாகக் கமிட்டியாகும். இவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

IX. சங்க நிதி:

பழைய மாணவர் சங்கத்திற்காகக் கொடுக்கப்படும் எல்லா நன்கொடைத் தொகைகளும் சேர்ந்து இச்சங்கத்தின் சாஸ்வத நிதியாகும். இது சங்கத்தின் தலைவர் வசம் ஒப்படைக்கப்படும். இந்நிதியிலிருந்து சங்கத்தின் சார்பாக நடத்தப்படும் கொண்டாட்டங்கள், பரிசளிப்புகள், சுற்றறிக்கைகள் முதலிய சங்க சம்பந்தமான செலவுகளுக்காக உபயோகிக்கப்படும். சங்க நிதியில் சேரும் தொகை, சங்க விஷயமான செலவுகளுக்கேயன்றி மற்ற யாதொரு காரியத்திற்கும் விநியோகிக்கப்படமாட்டாது.

X. கூட்டங்கள்:

1. **வருஷாந்தரக் கூட்டம்:** "பழைய மாணவர் தின" கொண்டாட்டத்தன்று தாய்ப்பாடசாலையில் கூடும்.

2. **சாதாரணக் கூட்டங்கள்:** சங்கத் தலைவரால் அப்போதைக்கப்போது அங்கத்தினர்களுக்குத் தெரியப்படுத்தித் தாய்ப்பாடசாலையில் நடத்தப்படும்.

XI. அங்கத்தினரின் கடமைகள்:

1. பூங்கொத்தில் பிரசுரிப்பதற்குத்தகுந்த விஷயங்களை ஆராய்ச்சிசெய்து, பத்திராதிபருக்கு அனுப்பிவைத்தல்.

2. பூங்கொத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு ஒவ்வொருவரும் இயன்றவரையில் புதிய சந்தாதார்களைச் சேர்க்கவும், பூங்கொத்தின் மணத்தைப் பரப்பவும் முயற்சியெடுத்தல்.

இறுதியில் சங். தலைவரவர்களுக்கும் கூடியிருந்த உபகமிட்டி அங்கத்தினருக்கும், காரியதரிசியால் வந்தனம் கூறப்பட்டு, கூட்டம் இனிது முடிவடைந்தது.

உழவைப்பற்றிய பழமொழிகள்

S. E. Arul Raj, *H I B.*

1. உழவுநட்பில்லா நிலமும், மிள்குநட்பில்லா கறியும் [வழவழா.
2. உழுது அலர்ந்தது, பழுதாகாது.
3. உழ அற உழுதால் விளைவற விளையும்.
4. உழவு உழுதுகாய்ந்தால் வித்திரட்டி காணும்.
5. ஜாண் உழவு முழு எருவுக்குச் சமானம்.
6. தை உழவு ஐயாட்டுக்கிடை.
7. உழவிலும் பகை எருவிலும் தீராது.
8. அகல உழுவதை ஆழ உழு.
9. தாழ உழுதால் தளிரோடும்.
10. ஆழ உழுதல் ஆட்டுரத்திற்குமதிகம்.
11. புழுதியுண்டானால் பழுதில்லை.
12. "வெண்ணைபோல உழவும் குண்ணுப்போல் விளைவும்."

ஆசிரியர்: நமது கைவிரல்களினால் சுலபமாக அழுத்தப்படக்கூடியவை, மிருதுவான பதார்த்தமெனப்படும்.

ஒரு மாணவன்: சீனுவின் கன்னம் சுலபமாக அழுந்துகிறது. சீனு மிருதுவான பதார்த்தம்தானே, சார்?

ஆகாய விமானம்

ஆசிரியர் எம். எஸ். சுந்தரேசய்யர்,
R. C. போதனுமுறைப் பாடசாலை, திண்டிவனம், S. A.

குழந்தைகள் முதல், கிழவர்கள் வரையில் தற்காலம் ஆகாய விமானத்தைப்பற்றி அறிந்திருக்கின்றனர்; மக்களுக்கு வேண்டிய உதவியை அது செய்தாலும் நாகரீக உலகில் அது செய்யும் தீமையை நினைத்தால் மனம் பதைக்கிறது; சரீரம் நடுங்குகிறது; ஆவி கலங்குகிறது; அந்தோ: ஆகாய விமானமே!!

ஆகாய விமானம், ஆகாயத்தில் அதிக வேகமாய்ச் செல்லும். மணிக்கு 400, 500 மைல்கள்கூடச் செல்லுகிறது. போகாத வழியெல்லாம் போகிறது அழகாகப் பறந்து செல்கிறது. பாலர்கள் "இதோ ஆகாய விமானம்" என்று சொல்வதற்குள்ளாக வெகுதூரம்வரையில் சென்றுவிடுகிறது. "வீர்" என்ற சப்தம் காதையடைக்கிறது. ஆகாய விமானம் பறக்கும்பொழுது தோற்றத்தில் பட்சியைப்போலிருக்கிறது; கார்மேகம் அதை மறைக்கிறது; உடனே அது வெளித்தோன்றுகிறது; மலை, கடல், காடு, பாலைவனம், இவைகளெல்லாம் அதற்கு லட்சியம் இல்லை. என்னே! விஞ்ஞான சாஸ்திரத்தின் பெருமை! நாகரீகத்தின் மாட்சி! வீழ்ச்சி!!

ஆகாய விமானப் பாட்டு ஒன்று ஐந்தாவது வகுப்புப் பிள்ளைகள் பாடுகிறார்கள். துரைத்தனத்தார் கல்வித்திட்டத்தின்படி பல்லவி, அநுபல்லவியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆதி தாளத்தில், பிலஹரி ராகத்தில் இதைப் பாடவும்.

பாட்டு

பல்லவி

ஆகாய விமானமே—அதி
வேகமாய்ச் செல்லும் அந்த— ஆகாய.

அநுபல்லவி

போகாத வழியெல்லாம் புகுந்து புகுந்து வெகு
வாகாய்ப் பறந்து செல்லும்— ஆகாய.

சரணங்கள்

1. பாரென்று சொன்னவுடன் பாலர்கள் பார்க்குமுன்னர்
வீரென்ற சப்தமுடன் விண்ணில் பறந்து வரும். ஆகாய.
2. காற்றுடன் பறந்தது ககனத்திலுறும்போது
தோற்றத்தில் பட்சியைப்போல் தோன்றிடுமந்தப் பெரு.
ஆகாய.
3. காகத்தின் நிறமென்று காண்பவர் கூறுமந்த
மேகத்தில் மறைந்தங்கு விசையுடன் வெளிப்படும். ஆகாய.
4. மஞ்சாரும் மலைவளம் மாக்கடல் தமை வென்றே
அஞ்சாமல் கடப்போர்க் கதிசயம் தருகிற. ஆகாய.
வாகு = அழகு; ககனம் = ஆகாயம்; மஞ்சு = மேகம்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	ரூ. 1—0—0
வெளி நாடு	ரூ. 1—6—0

விலாசம்:—

சூப்பரின்டேன்டேண்டு,
சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சிராப்பள்ளி.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182294
சென்னை 600 008

புத்தக விளம்பரம்

SCHOOL NURSERY RHYMES

பால சங்கீத வாசகம் :—இதில் புதிய பாடத்திட்டப்படி எல்லா பாடங்களையும் சம்பந்தப்படுத்தி முதல் மூன்று வகுப்புகளுக்கு, சாதாரண ராகங்களில் சுலப மொழிகளால் பாடல்கள் அமைக்கப்பெற்ற ஓர் சங்கீதப் புத்தகம்.

ஆசிரியர்கள் இடத்திற்குத் தகுந்தாப்போல், தாம் சொந்த ராகங்களை அமைத்தும் பாட இசைந்தது.

முதல் வகுப்புக்கு. 1. வாசகபாட சம்பந்தமாய் : விளையாட்டுப் பாட்டுகள், வீட்டுப் பாட்டுகள், பராக்குக்காட்டும் பாட்டுகள், நிலா, பட்சிகளை அழைத்தல், விடுகதைகள். கதைகளுக்கு அபிநயப் பாடல்களும் உண்டு.

2. கணக்கு : 1–10 வரையில் பொருள்களின் மதிப்பை உணர்த்தி, எண்கள் கற்பித்தல் ; 1 முதல் 10 வரையில் கூட்டல் கழித்தல் வாய்ப்பாடு நாட்டு ராகம்.

3. தோட்டவேலையில் : தாவரவர்க்கம், பாகங்கள், உணவு முதலியன.

4. தேசபரிபாலனம் : தாயார் தகப்பனுரின் அன்பும், அவர்களின் மரியாதையும்.

5. சுகாதாரம் : காலைக்கடன், தினக்கடமை, தேகம், உடை சுத்தம், ஸ்நானம் இன்னும் பலவற்றிற்கும் பாடல்கள் உண்டு.

அனேக இடங்களில் பாடசாலை சங்கீதப்பாடப்புத்தகமாய் வைக்கப்படுகிறது.

வெகு எளிதாய் பாலர்கள் புதிய மொழிகளைக் கற்றுக் கொள்ள ஏற்றது.

பாலர் புத்தகம் $4\frac{1}{2}$ அணு. மாதிரிக்காப்பி $2\frac{1}{2}$ அ. ஸ்டாம்புகள்.
ஆசிரியர் புத்தகம் $6\frac{1}{2}$ அணு. மாதிரிக்காப்பி $3\frac{1}{2}$ அ. ஸ்டாம்புகள்.

பள்ளிக்கூடங்களுக்கு மொத்தமாய் வாங்குவோர்களுக்கு 12-க்கு ஒன்று கூட்டி தரப்படும்.

விலாசம் :

A. ஞானதிக்கம்,
மியூஸிக் டீச்சர்,
தி சௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல், செயின்ட் தாமஸ் சர்ச் ரோட், உதகமண்டலம்.

தலைமை உபாத்தியாயர்,
R. C. போதனுமுறை பாடசாலை,
திருச்சினுப்பள்ளி.

THOMAS SPORTS

[*Pro: I. PONNIAH PILLAI*]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR:

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR:

Spalding Australian Dunlop

American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING

RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.